ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 1.10 – கண்ணார் கடல்சூழ்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 1.10 – கண்ணார் கடல்சூழ்

‡ கண் ஆர் கடல் சூழ் ⋆
இலங்கைக்கிறைவன் தன் ⋆
திண் ஆகம் பிளக்கச் ⋆
சரம் செல உய்த்தாய் ! ⋆
விண்ணோர் தொழும் ⋆
வேங்கட மா மலை மேய ⋆
அண்ணா ! அடியேன் ⋆
இடரைக் களையாயே || **1.10.1** ||

இலங்கைப் பதிக்கு ⋆
அன்றிறை ஆய ⋆
அரக்கர் குலம் கெட்டவர் மாளக் ⋆
கொடிப் புள் திரித்தாய் ! ⋆
விலங்கல் குடுமித் ⋆
திருவேங்கடம் மேய ⋆
அலங்கல் துளப முடியாய் ! ⋆
அருளாயே || **1.10.2** ||

நீர் ஆர் கடலும் ⋆
நிலனும் முழுதுண்டு ⋆
ஏர் ஆலம் இளந் தளிர் மேல் ⋆
துயில் எந்தாய் ! ⋆
சீர் ஆர் ⋆

திருவேங்கட மா மலை மேய ⋆
ஆரா அமுதே ! ⋆
அடியேற்கருளாயே ‖ **1.10.3** ‖

உண்டாய் உறி மேல் ⋆
நறு நெய் அமுதாக ⋆
கொண்டாய் குறள் ஆய் ⋆
நிலம் ஈர் அடியாலே ⋆
விண் தோய் சிகரத் ⋆
திருவேங்கடம் மேய ⋆
அண்டா ! அடியேனுக்கு ⋆
அருள் புரியாயே ‖ **1.10.4** ‖

தூண் ஆய் அதன் ஊடு ⋆
அரி ஆய் வந்து தோன்றி ⋆
பேணா அவுணன் உடலம் ⋆
பிளந்திட்டாய் ! ⋆
சேண் ஆர் ⋆
திருவேங்கட மா மலை மேய ⋆
கோள் நாகணையாய் ! ⋆
குறிக்கொள் எனை நீயே ‖ **1.10.5** ‖

மன்னா ⋆
இம் மனிசப் பிறவியை நீக்கி ⋆
தன் ஆக்கித் ⋆
தன் இன் அருள் செய்யும் தலைவன் ⋆
மின் ஆர் முகில் சேர் ⋆
திருவேங்கடம் மேய ⋆

என் ஆனை என் அப்பன் ⋆
என் நெஞ்சில் உளானே ॥ **1.10.6** ॥

மான் ஏய் மட நோக்கி ⋆
திறத்தெதிர் வந்த ⋆
ஆன் ஏய் விடை செற்ற ⋆
அணி வரைத் தோளா ! ⋆
தேனே ! ⋆
திருவேங்கட மா மலை மேய ⋆
கோனே ! என் மனம் ⋆
குடி கொண்டிருந்தாயே ॥ **1.10.7** ॥

சேயன் அணியன் ⋆
என சிந்தையுள் நின்ற மாயன் ⋆
மணி வாள் ஒளி ⋆
வெண் தரளங்கள் ⋆
வேய் விண்டுதிர் ⋆
வேங்கட மா மலை மேய ⋆
ஆயன் அடி அல்லது ⋆
மற்றறியேனே ॥ **1.10.8** ॥

வந்தாய் என் மனம் புகுந்தாய் ⋆
மன்னி நின்றாய் ⋆
நந்தாத கொழுஞ்சுடரே ⋆
எங்கள் நம்பீ ! ⋆
சிந்தாமணியே ⋆
திருவேங்கடம் மேய எந்தாய் ! ⋆

இனி யான் உன்னை ⋆
என்றும் விடேனே ॥ **1.10.9** ॥

‡ வில்லார் மலி ⋆
வேங்கட மா மலை மேய ⋆
மல்லார் திரள் தோள் ⋆
மணி வண்ணன் அம்மானைக் ⋆
கல்லார் திரள் தோள் ⋆
கலியன் சொன்ன மாலை ⋆
வல்லார் அவர் ⋆
வானவர் ஆகுவர் தாமே ॥ **1.10.10** ॥

அடிவரவு — கண் இலங்கை நீர் உண்டாய் தூணாய் மன்னா மானேய் சேயன் வந்தாய் வில் வானவர்

கண்ணார் கடல்சூழ் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்